RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்



OPEN ACCESS

# விளிம்பு நிலை எழுத்திற்கான வித்து : ராஜம் கிருஷ்ணன்

**சா. பாத்திமா** [அ, *]

[அ] தமிழ்த்துறை, பஷீர் அகமது சயீது மகளிர் கல்லூரி, தேனாம்பேட்டை, சென்னை-600018, இந்தியா

# Rajam Krishnan: The Seed of Marginal Writing

**S. Fathima** [a, *]

[a] Department of Tamil, Justice Basheer Ahmed Sayeed College for women, Teynampet, Chennai-600018, India

*Corresponding Author:
fa.malar.1988@gmail.com

Received: 09-12-2025
Revised: 17-02-2026
Accepted: 05-03-2026
Published: 17-03-2026

**ABSTRACT**

The Sangam corpus, comprising the Ettuthokai (Eight Anthologies) and the Pattuppattu (Ten Idylls), is one of the most significant collections of classical Tamil literature, preserving the ethical values, social customs, and cultural traditions of the ancient Tamils. The Ettuthokai includes eight anthologies, of which Natrinai, Kurunthogai, Ainkurunuru, Akananuru, and Kalithogai primarily deal with Akam (the inner world of love and personal life), while Purananuru and Pathitrupathu focus on Puram (public life, heroism, and social values). Paripadal uniquely encompasses both Akam and Puram themes. Collectively, these works preserve numerous records of the moral values, cultural practices, and ways of life followed by the ancient Tamil people. This study aims to examine the cultural records found in the classical Ettuthokai anthologies, with particular emphasis on domestic life, generosity, heroism, warfare, hospitality, and the ethical principles that shaped ancient Tamil society. The research primarily draws upon Natrinai, Kurunthogai, Kalithogai, Akananuru, Pathitrupathu, and Purananuru, together with relevant secondary sources, to analyze the cultural heritage preserved in these classical literary works. Through this analysis, the study highlights the enduring cultural values embedded in Sangam literature and their significance in understanding the social history of the ancient Tamils.

**Keywords:** Cultural Traditions, Tamil society, Eight Anthologies, Classical Tamil Literature

## முன்னுரை

விளிம்பு நிலை மனிதர்கள் என்பவர்கள் பொதுவாக மையத்திலிருந்து விலகியவர்களாக உள்ளனர். இவர்கள் மேட்டிமைக் குழுவிற்கு நேர்மாறாக எண்ணிக்கையில் அதிகமானவர்களாகவும் சமூக வளங்களில் உரிய பங்கு பெற முடியாதவர்களாகவும் உள்ளனர்.“விளிம்பு நிலை மக்கள் என்பதற்கு சாதி, செய்யும் தொழில், அரசியல் அதிகாரம், சமூக மேட்டிமை, பொருளியல் நிலை, பண்பாட்டு ஆளுமை ஆகியவற்றுள் ஒன்றோ அல்லது அனைத்து நிலையிலும் தாழ்ந்திருக்கும் அல்லது சமூக கட்டுமானத்தின் ஓரத்தில் இருக்கும் மக்கள் என வரையறை செய்கிறார் ஆ.சிவசுப்பிரமணியன்.” (2002: 50) ராஜம் கிருஷ்ணன் படைப்புகளில் இவ்வாறான விளிம்புநிலை மனிதர்களையே மிகுதியாக காணமுடிகிறது. இதைக் குறித்து “அவரின் பெரும்பாலான படைப்புகள் மைய நீரோட்டத்தில் இருந்து விலக்கப்பட்டவர்களாகவும் விலகியவர்களாகவும் உள்ள எளிய மக்களின் வாழ்க்கையை வெளிச்சத்துக்குக் கொண்டுவந்ததுடன், அவர்களின் அவல வாழ்க்கையையும் பேசின” என்கிறார் பா.ஜீவசுந்தரி.(2024:www.hindutamil.in) ராஜம் கிருஷ்ணன் பெரும்பாலும் படைப்புகளை எழுதுவதற்கு முன் களப்பணி மேற்கொண்டு மனிதர்களின் வாழ்வியலை உணர்ந்த பின்பே தன் எழுத்துப்பணியைத் தொடங்குவதை பல இடங்களில் பதிவு செய்துள்ளார்.

## மீனவர் சமூகம் - பதிவுகள்

தொழில் மற்றும் பொருளாதார அடிப்படையில் பின்தங்கிய சமூக அமைப்பாக மீனவர் சமூகம் உள்ளது. இவர்களைக் குறித்து ராஜம்கிருஷ்ணனின் அலைவாய்க்கரையில்', 'கரிப்பு மணிகள்' என்ற நாவல்களின் கதைக் கருக்கள் பதிவு செய்துள்ளது. மீனவர் வாழ்க்கையையும் உப்பளத் தொழிலாளர் வாழ்க்கையையும் சித்தரிக்கின்றன. 'அலைவாய்க்கரையில்' மீனவர் வாழ்க்கையின் தற்காலப் பிரச்சினைகளைத் தேர்ந்தெடுத்து அவை எச்சமூகச் சூழலில் நிகழ்கின்றன என்று ஆசிரியர் காட்டுகிறார். பணக்காரர்கள் விசைப்படகுகளைப் பயன்படுத்தி மீன் பிடிக்கத் தொடங்குகிறார்கள். விசைப்படகினால் கட்டுமரத்தில் மீன்பிடிக்கும் தொழிலாளிகள் மிகுந்த பாதிப்புக்குள்ளாகிறார்கள் என்பதையும் பதிவு செய்துள்ளார்.

இடிந்தகரை, மணப்பாடு மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகள் சுறா மீன்கள் அதிகம் கொண்ட பகுதி, இதன் இறக்கையும் வாலும் துவி என அழைக்கப்படுகின்றன. இது விலை உயர்ந்த பொருள். ஆனால் இதனைப் பெற்றுக்கொண்டு இதன் விலைக் குறைவு என்று மீனவ சமூகத்தவர்களை ஏமாற்றிய விதத்தை தன் அலைவாய்க்கரையில் நாவலில் பதிவு செய்துள்ளார் ராஜம் கிருஷ்ணன்.

'கரிப்பு மணிகள்' உப்பளத் தொழிலாளர்களின் கரிக்கும் வாழ்வை வெளிப்படுத்துகிறது. கண்களைக் கூசவைக்கும் உப்புப்படலத்தின் மீது கொளுத்தும் வெயிலில்தான் அவர்கள் வேலை செய்யும் சூழல் உள்ளது. காலுக்குச் செருப்பு அணிய முடியாமல் பனையோலையைச் சுற்றிக்கொள்வார்கள். சிராய்ந்த காலில் உப்புத்துகள் பட்டு எரிச்சல் மற்றும் வலியைக் கொடுக்கின்றது. 40 வயதிலேயே மிகுதியான மனிதர்கள் பார்வையை இழக்கும் அபாயம் இருப்பதை நாவல் குறிப்பிட்டுள்ளது. உப்பைப் பார்த்துப்பார்த்துக் கண்கள் கூசிப்போகின்றன. கூலி உயர்வுக்காக அவர்கள் நடத்தும் போராட்டத்தை 'கரிப்பு மணிகள்' விளக்கியுள்ளது.

## குழந்தைத் தொழிலாளர் - பதிவுகள்

வறுமை மற்றும் உணவின்மை காரணமாகவே பெரும்பாலும் குழந்தைத் தொழிலாளர்கள் உருவாகின்றனர். சிவகாசியில் பட்டாசுத் தொழிற்சாலையில் வேலைப் பார்த்த பல சிறுவர்கள் உழைப்பு சுரண்டப்பட்டு இறுதியில் ஆற்று வெள்ளத்தில் அடித்து செல்லப்பட்டு உயிரிழக்கும் நிலையை ராஜம் கிருஷ்ணன் 'கூட்டுக் குஞ்சுகள்' நாவல் பதிவு செய்துள்ளது. சிறுகுழந்தைகளுக்காக போராடும் விஜி என்ற கதைமாந்தர் பற்றியும் அறியமுடிகின்றது. தீப்பெட்டித் தொழிற்சாலையில் வேலை செய்பவர்கள் ஒருவருடன் ஒருவர் பேசிக்கொள்ளக்கூடாது என்ற நிலை இருந்ததையும் நாவல் வாசிக்கையில் உணரமுடிகிறது. உழைப்புக்கேற்ற ஊதியம் வழங்காமல் உழைப்பு சுரண்டப்படுவதையும் காணமுடிகிறது. உழைப்புச் சுரண்டலுடன் பாலியல் சுரண்டலுக்கும் குழந்தைகள் ஆளாவதை நாவல் பதிவு செய்துள்ளது.

## பழங்குடி மக்கள் - பதிவுகள்

நீலகிரியில் வாழும் படுகர்களின் வாழ்வுச் சூழலை விவரித்து எழுதப்பட்ட நாவல் 'குறிஞ்சித்தேன்'. படுகர் இன மக்கள் எவ்வாறு தமது பாரம்பரிய விவசாய முறைகளைக் கைவிட்டுப் பணப்பயிரான தேயிலை விவசாயத்துக்கு மாறுகிறார்கள் என்பதைக் குறிப்பிடும் நாவல். மோவாகட் என்னும் குறிஞ்சி மலர் பன்னிரெண்டு வருடங்களுக்கு ஒருமுறை பூக்கும். ஐந்து குறிஞ்சிமலர் காலங்களை எடுத்துக் கொண்டு 60 ஆண்டுகளில் அவர்களின் வாழ்வியல் மாற்றத்தை எடுத்துரைத்துள்ளார் ராஜம் கிருஷ்ணன். விவசாய முறையைக் கைவிட்டு தங்கள் சிறு நிலங்களில் தேயிலை பயிரிட நேரும் அவலத்தையும் பொருளாதார வாழ்வியலில் ஏற்படும் மாற்றத்தையும் விளக்குகிறது. பொருளாதார மாற்றத்தை மட்டுமின்றி பண்பாட்டு மாற்றத்தையும் விளக்கியுள்ளது.

## பெண்கள் - பதிவுகள்

பெண்ணை சுமையாகப் பார்த்து பெண் பிள்ளைகள் என்றாலே செலவுக்கு உரிய நபராக கருதிய நேரத்தில் பெண் சிசுக்கள் மதுரை, உசிலம்பட்டி போன்ற இடங்களில் அதிகமாக கொலை செய்யப்பட்டன. இதைத் தன் களஆய்வுப்பணி மூலம் உணர்ந்த ராஜம் கிருஷ்ணன் "மண்ணகத்துப் பூந்துளிகள்" என்ற நாவலில் பதிவு செய்துள்ளார். 'பெண்குரல்' நாவலில் கூட்டுக் குடும்பங்களில் வாழும் அழுத்தப்பட்ட பெண்களின் வாழ்க்கைகள் எடுத்துரைக்கப்பட்டன. 'தூசி' என்ற சிறுகதையில் மாமி என்று அழைக்கப்படும் சுந்தராம்பாள் தனக்கும் தான் விரும்பிய அவள் தந்தைக்கும் இருக்கும் உறவை காலம் கடந்து அறிந்த பின்பு தனக்கு வரும் கண்ணீரை அடக்கிக் கொண்டு தூசி என்று சமாளிக்கும் நிலையை அறியமுடிகின்றது.

மற்றொரு சிறுகதையான "வேலி" என்கிற சிறுகதையில் மாலதி என்கிற பின்தங்கிய சமூக பெண்ணை தன் மகன் திருமணம் செய்து கொண்டு வந்து விட்ட போதும் வீட்டில் அவளுக்கான அறையை தவிர்த்து வேறு எந்த இடத்திலும் புழங்க அனுமதிக்காத நிலை இருப்பதை பதிவு செய்துள்ளார். தொட்டு புழங்க அனுமதிக்காமல் அவளுடைய பணத்தை மட்டும் கேட்கும் நிலையை குறிப்பிட்டுள்ளார். மேலும் கர்ப்பிணிப்பெண் மாலதியிடம் உழைப்புச் சுரண்டல் மற்றும் பொருளாதார சுரண்டல் நிகழ்த்துவதையும் காணமுடிகிறது.

இவரது நாவல்களில் மிக முக்கியப் படைப்பாக கருதப்படக்கூடியது 'பாதையில் பதிந்த அடிகள் 'நாவல் ஆகும். வரலாற்றில் பலராலும் மறந்து போன முகமாக கருதப்படும் மணலூர் மணியம்மையார் என்ற முக்கியமான ஆளுமையைப் பற்றிய நாவல். தஞ்சைப் பகுதியில் காலங்காலமாக அடிமைப்பட்டுக் கிடந்த அடிமைத் தொழிலாளர்கள் வீறுகொண்டு எழுந்து பண்ணயடிமை முறைக்கு எதிராகப் போராடத் தூண்டியவர். அவரைப் பற்றிய வாழ்க்கை வரலாறாக எழுதப்பட்டதே இந்நூல். இவரை தஞ்சை மக்கள் இன்றும் மறக்காமல், தங்கள் நாட்டுப்பாடல்களில் மணியம்மா என்றே அழைக்கின்றனர்.

## முடிவுரை

ராஜம் கிருஷ்ணன் தன் வாழ்க்கையில் எழுத்தையும் பெண் விடுதலைக்கு குரல் கொடுப்பதையும் மிக முக்கிய நோக்கமாக கொண்டு செயல்பட்டதை அறியமுடிகின்றது. சமூகத்தின் உயர்சமூக மனிதர்களை எழுத்தில் பதிவு செய்ததை விட விளிம்பு நிலை மனிதர்களைக் கண்டு அவர்களின் நிலையை பதிவு செய்துள்ளார். சமூக மாற்றம் காண விரும்பியதற்கு அவர் படைப்புகளே சான்றாக அமைகின்றன. ராஜம் கிருஷ்ணன் தான் எழுதிய சிறுகதைகளில் பெண் விடுதலைச் சிந்தனைகளை ஆழமாக முன் வைத்துள்ளார். ஆனால் அவர் படைத்த பெண்கள் தங்கள் இலக்கில் வெற்றியடைந்தார்கள் என்று கூற முடியாவிட்டாலும், அடிமைத்தனத்தில் முடங்கிக் கிடந்த பெண்ணினம் விழிப்படைய, தொடர்ந்து முயற்சிகள் செய்துள்ளார் என்பதை மறுக்க முடியவில்லை. ராஜம் கிருஷ்ணன் பேசிய பெண் விடுதலை மரபு வழிபட்ட தமிழ்ப் பண்பாட்டுக் கட்டுமானங்களை அடியோடு தகர்க்கவில்லை என்றாலும் அதனை அசைத்துப் பார்த்தது என்பதை உறுதியாகக் கூறலாம். தன் இறுதிக்காலம் வரை எந்த ஒன்றிலும் பெரிய எதிர்பார்ப்பின்றி பெண் விடுதலை சமூக விடுதலை என்ற நோக்கத்தோடு மட்டுமே பயணித்த மனிதர் என்பதில் மாற்றுக்கருத்தில்லை.

## References


Sivasubramaniyan. A., (2002) Adiththala Makkal Varalaru, Makkal Veliyidu, Chennai.

Rajam Krishan, (2003) Pen Viduthalai Ilakkiyathilum Vazhvilum, Thagam, Chennai.

Jivasunthari, P. (2024) Pen Vazhvuthanai Pesiya Padaippali Rajam Krishan 100



**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.



**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2026. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License